செ.வெ.எண்.340/2009/செமதொஅ நாள்:10.10.2009

**திருபெரும்புதூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் இலவச மிதிவண்டிகளை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் வழங்கினார்.**

காஞ்சிபுரம் மாவட்டம், திருபெரும்புதூர் அரசு மேல் நிலைப்பள்ளி மற்றும் மொளச்சூர் மேல்நிலைப்பள்ளியில் படிக்கின்ற மாணவ-மாணவிகளுக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் கலந்து கொண்டு பள்ளி மாணவ-மாணவிகளுக்கு இலவச மிதிவண்டிகளை வழங்கி பேசியதாவது,

மாணவ செல்வங்கள் தரமான கல்வி பயில வேண்டும் என்பதற்காக ரூ.9147 கோடி நிதி ஒதுக்கீட்டினை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் வழங்கியுள்ளார். கடந்த 3¼ ஆண்டுகளில் தமிழகம் முழுவதும் 430 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப்பள்ளிகளாகவும், 420 உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் 69 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப்பள்ளிகளாகவும், 18 நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப்பள்ளிகளாகவும், 12 உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப்பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. புதியதாக 12 ஆயிரம் ஆசிரியர் பணியிடம் நிரப்பப்பட உள்ளன. மாணவர்கள் தரமான கல்வி பயிலவேண்டும் என்பதற்காக இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் கல்வித்துறைக்கு என்று இரண்டு அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இந்த பள்ளி கடந்த ஆண்டு 10ம் வகுப்பு தேர்வில் 57 சதவீதமும், 12ம் வகுப்பு தேர்வில் 62 சதவீதமும் தேர்ச்சி பெற்றுள்ளார்கள். தனியார் பள்ளிக்கு ஈடாக இந்த பள்ளி விளங்குகிறது. எனவே, மாணவ செல்வங்களாகிய நீங்கள் சிறப்பாக கல்வி பயின்று 100 சதவீதம் தேர்ச்சி பெற வேண்டும். வருங்காலத்தில் நீங்கள் பொறியாளர்களாகவோ, மருத்துவர்களாகவோ விளங்க வேண்டும். அதற்கு அரசு என்றென்றும் உறுதுணையாக இருக்கும் என கூறினார்.

விழாவில் திருபெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.டி.யசோதா, மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு.த.துரைசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னதாக பள்ளி தலைமை ஆசிரியர் திரு.எஸ்.ராமமூர்த்தி அனைவரையும் வரவேற்றார். முடிவில் உதவி தலைமை ஆசிரியர் நன்றி கூறினார். விழாவில் ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர் திருமதி.வனமயில் மாணிக்கம், துணைத் தலைவர் திரு.நிக்கோலஸ், பேரூராட்சி தலைவர் திரு.செல்வமேரி அருள்ராஜ் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவ – மாணவிகள் கலந்து கொண்டனர்.

வெளியிடுபவர்

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.